**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண். 30/2016</u>**

PW2. செல்வி.சித்தி சமினா (சார்பதிவாளர் தொண்டி) நாள்.01.08.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>முதல் விசாரணை</u>**

ராக்கன் ஆகிய சின்னவன் சீதையம்மாளுக்கு எழுதிக் கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திர எண்.273/1962 உடைய Volume (1961–1962) extract **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி extract ல் மேற்படி ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்டவர்களாக ராக்கன் ஆகிய சின்னவன் மகன் சி.கோபால் மற்றும் ராக்கன் மகன் ஆறுமுகம் ஆகியோர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. மேற்படி சொல்லியுள்ள Volume (1961–1962) ரிஜிஸ்டரில் ஆவணத்தில் கைபொப்பமிடும் தரப்பினர்களுடைய கையெழுத்தையோ சாட்சிகளுடைய கையெழுத்தையோ பெறுவதில்லை என்றால் சரிதான். மேற்படி Volume ல் ஆவணங்கள் இயற்றப்படும்போது தரப்பினர்களுடைய அடையாள ஆவணங்களை பெற்று அதை பற்றிய குறிப்புகள் இருக்குமா என்றால் அந்த காலகட்டத்தில் அடையாள ஆவணங்கள் வாங்குவதும் Volume ல் பதிவதும் வழக்கம் இல்லை தற்போதுதான் பெற்றுள்ளோம்.

2. இனாம் செட்டில்மெண்ட் பத்திர எண்.273/1962 ன் உண்மை தன்மையை மேற்படி Volume ரிஜிஸ்டரை மட்டும் பார்த்து உறுதி செய்ய முடியாது என்றால் மேற்படி

ஆவணத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும்மேற்படி ரிஜிஸ்டரில் இருக்கும் ஆனால் ராக்கனாகிய சின்னவன் தான் இப்பத்திரத்தை இயற்றினார் என்பதை ரிஜிஸ்டரை மட்டும் பார்த்து உறுதியாக சொல்ல முடியாது ஏனென்றால் நான் 2020 ல் இருந்து தான் தொண்டி சார் பதிவாளராக பணியில் உள்ளேன்.

3. மேற்படி Volume ரிஜிஸ்டரில் ராக்கனாகிய சின்னவன் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ராக்கன் என்ற சின்னவன் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ராக்கனாகிய சின்னவன் சீதையம்மாளுக்கு எழுதியதாக மேற்படி இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எனது அலுவலகத்தில் மோசடியாக பதியப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல, அந்த காலகட்டத்தில் இருந்த சார் பதிவாளர் தகுந்த விசாரணையின் அடிப்படையில் தான் பதிவு செய்திருப்பார். ராக்கனாகிய சின்னவன் அன்றைய தேதியில் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆஜராகி மேற்படி ஆவணத்தை சீதையம்மாளுக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது.

(ஒம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை